[1978 செப்டம்பர் 12

சென்னை வள்ளுவர் கோட்டத்தில் இலக்கியம் பண்பாட்டு நிகழ்ச்சிகள்.

*வினா எண் 158— திரு. என். கிட்டப்பா : மாண்புமிகு செய்தி அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா?

சென்னை வள்ளுவர் கோட்டத்தில் அரசியல் சார்பற்ற இலக்கிய, பண்பாட்டு நிகழ்ச்சிகளுக்கு வாடகை அடிப்படையில் இடமளிக்க அனுமதி வழங்குவது பற்றி அரசு பரிசீலித்து வருகிறதா ?

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன்: சென்னை, வள்ளுவர் கோட்டத்தின் அரங்க மண்டபத்தை அரசுத்துறைகளுக்கும், பொது மற்றும் தனியார் நிறுவனங்களுக்கும் அரசியல் சார்பற்ற கலை நிகழ்ச்சிகள், கருத்தரங்குகள், மாநாடுகள் முதலியன நடத்துவதற்கு வாடகைக்கு ஒதுக்கீடு செய்வதற்கான வகையில், அரசு ஏற்கனவே, பரிசிலனை செய்து, ஆணை பிறப்பித்திருக்கிறது.

திரு. என். கிட்டப்பா : தலைவர் அவர்களே, சென்னை வள்ளுவர் கோட்டத்தில் அரசு இலக்கிய, பண்பாடு சம்பந்தமான அரசியல் சார்பற்ற விழாக்களுக்கு வாடகை அடிப்படையில் அனுமதி அளித்து வருவதாக மாண்புமிகு அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டிருக்கிறார்கள். ஆயினும், அங்கே நடைபெற்ற சிலபல நிகழ்ச்சிகளில் வள்ளுவர் கோட்பாட்டிற்கு புறம்பாக-அவர் விரும்பாத, எதிர்பார்த்ததற்கும் மாறான நிகழ்ச்சிகள் ஏற்பாடு செய்யப்பட்டு, அதற்கும் அனுமதி வழங்கப்பட்டிருக்கிறது. அதைத் தவிர்ப்பதற்கு அரசு நடவடிக்கை எடுக்க முன்வருமா என்று அறிய விரும்புகிறேன் ?

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : தலைவர் அவர்களே, சில அடிப்படை நிபந்தனைகளுக்கு உட்பட்டுத்தான் வள்ளுவர் கோட்டம் அனுமதிக்கப்பட வேண்டுமென்று கண்டிப்பாக நிபந்தனைகள் விதிக்கப்பட்டிருக்கின்றன. அதையும் மீறி ஏதாவது இப்படி நடைபெற்றிருக்குமானால், அது அரசின் கவனத்திற்குக் கொண்டு வரப்பட்டால் இதுவரை அப்படி ஒன்றும் வரவில்லை, அதற்குத் தகுந்தாற்போல் கண்டிப்பாக நடவடிக்கை எடுத்து, இனிமேல் அப்படிப்பட்ட நிகழ்ச்சிகள் நடைபெறாமல் தடுக்கப்படும்.

திரு. ரா. மார்க்கபந்து : தமிழக அரசின் சார்பில் டைரக்டரேட் ஆப் திருக்குறள் பிராபகண்டா என்ற முறையில் அமைத்து திருக்குறளைத் தமிழகம் பூராவும் பரப்புவதற்கான முயற்சியை இந்தத் தமிழக அரசு எடுத்துக் கொள்ளுமா ?

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : வேறு தனிக் கேள்வி போட்டால் இதற்கு விவரமான விடை அளிக்கப்படும் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

1978 செப்டம்பர் 12]

திரு. க. சுப்பு: கட்சி அரசியல் ஜனநாயகத்தை அடிப் படையாகக் கொண்டிருக்கும் இந்த நாட்டில் எந்த நிகழ்ச்சி நடந்தாலும் அரசியல் சார்பு இல்லாததாக இல்லை, ஆகவே, எல்லாவிதமான நிகழ்ச்சிகளுக்கும் பணத்தை வாங்கிக்கொண்டு கொடுக்க அரசாங்கம் நடைமுறைக்குக் கொண்டு வருமா ?

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன்: எல்லாவிதமான நிகழ்ச்சிகளுக்கும் என்று எந்த இலக்கணத்தின் அடிப்படையில் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தெரிவிக்கிறார்கள் என்று தெரியவில்லை. அதைத் தெரிவித்தால் எந்த அடிப்படையில் தரலாம் என்று அரசு பரிசீலிக்கும்.

திரு. என். கிட்டப்பா: தற்போது வள்ளுவர் கோட்டத்தில் அனுமதிக்கப்படுகிற நிகழ்ச்சிகளுக்கு நாள் ஒன்றுக்கு வசூலிக்கப் படுகிற கட்டணத் தொகையை அறிய இயலுமா ?

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன்: அரசுத் துறை நிகழ்ச்சிகளுக்கு முழு நாளைக்கு 1,000 ரூபாய்; பிற அரசு சார்பு நிறுவனங்களுக்கு 1,500 ரூபாய்; மற்றவர்களுக்கு 2,000 ரூபாய். காலை 8 மணி முதல் 1 மணி வரை அரசுத் துறை நிகழ்ச்சிகளுக்கு 500 ரூபாய்; பிற அரசு சார்பு நிறுவனங்களுக்கு 750 ரூபாய்; மற்றவர்களுக்கு 1,000 ரூபாய். மாலை 2 மணி முதல் இரவு 10 மணி வரை அரசுத் துறை நிகழ்ச்சிகளுக்கு 750 ரூபாய்; பிற அரசுத் துறை சார்பு நிறுவனங்களுக்கு 1,125 ரூபாய்; மற்றவர்களுக்கு 1,500 ரூபாய்.

திரு. க. சுப்பு: அப்போது கேட்ட கேள்விக்கு விளக்கம் சொல்லுகிறேன். பொதுவான சில விழாக்கள் ஆசிரியர் தின விழாக்கள், குழந்தைகள் தின விழாக்கள், பெரியவர்கள் தின விழாக்கள் நடைபெறுகின்றன. இவற்றில் அரசியல் கலக்காமல் இருக்க முடியாது. காமராஜ் விழா ராஜாஜி விழா என்றாலும் அரசியல் இல்லாமல் இருக்க முடியாது. இப்படிப் பொதுவாக விழாக்களுக்குக் கொடுப்பதோடு கட்டணம் வாங்காமல் கொடுக்க அமைச்சர் அவர்கள் நடவடிக்கை எடுப்பார்களா?

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன்: மாண்புமிகு உறுப் பினர் அவர்கள் இரண்டு பிரச்சினைகளை ஒரு கேள்வியில் கேட்டி ருக்கிறார். அனுமதிப்பது என்பது ஒன்று. அனுமதிக்கப்பட வேண்டுமென்று சொல்லும்போது கட்டணம் இல்லாமல் அனு மதிக்க வேண்டுமென்பது இரண்டாவது. அனுமதிப்பது என் பது பொதுவாகப் பரிசீலிக்கப்பட வேண்டிய ஒன்று. அப்படி அனுமதிக்கப்பட்டால் கட்டணம் இல்லாமல் அனுமதிக்கப்பட வேண்டுமென்றால் அந்தத் திருவள்ளுவர் கோட்டத்தை எப்படி நடத்துவது என்பதற்கு மாண்புமிகு உறுப்பினர் அவர் கள் வழி சொன்னால் அதுபற்றி அரசு பரிசீலிக்கும்.